DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : முனியசாமி | Father/Husband Name : செல்லையா |
| Age : 32 | Village : மேட்டமலை |
| Taluk : | Calling : Match Factory |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16 Jun 2026 14:28

(Accused Present)

**எதிரி தரப்பில் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை –**

1. கொத்தாள முத்தையா மேட்ச் வொர்க்ஸ் என்ற நிறுவனம் என்னுடைய அம்மாவின் பெயரில் உள்ள தனிப்பட்ட நிறுவனம் என்றால் சரிதான். என்னுடைய அம்மா பெயர் தான் அந்த நிறுவனத்திற்கான ஜிஎஸ்டி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களுடைய தீப்பெட்டி தொழிற்சாலையில் எத்தனை வகை தீக்குச்சி தயார் செய்து கொடுக்கிறோம் என்றால் 4 வகை தயார் செய்து கொடுக்கிறோம். எங்களுடைய தொழிற்சாலையில் விற்பனை செய்யப்படும் அனைத்து பொருட்களுக்கும் பில் உண்டு என்றால் சரிதான். அந்த விற்பனையை காண்பிக்க தனியாக பேரேடு பராமரிக்கிறோம் என்றால் சரிதான்.

2. ஒவ்வொரு மாதமும் எவ்வளவு விற்பனை நடைபெறுகிறதோ அதற்கு கணக்கு காண்பித்து ஜிஎஸ்டி வரி கட்டுவோம் என்றால் சரிதான். ஒரு வாடிக்கையாளரின் பெயருக்கு பில் போடுவதற்கு முன்பாக அவருடைய ஜிஎஸ்டி பதிவு நகலை வாங்கி அதை பார்த்து தான் பில் போடுவோம் என்றால் சரிதான். மேற்படி தீப்பெட்டி தொழிற்சாலையை நான் தனிப்பட்ட முறையில் பார்ப்பதற்கு என்னுடைய அம்மா எனக்கு எழுத்து மூலமாக அங்கீகாரம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எங்களுடைய நிறுவனத்தின் வங்கி கணக்கை பயன்படுத்த எனக்கு தனிப்பட்ட முறையில் என்னுடைய அம்மா அங்கீகாரம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எங்களுடைய நிறுவனத்தின் பில் நகலில் அங்கீகாரம் பெற்ற நபரின் கையெழுத்து போடுவதற்கு எனக்கு அதிகாரம் கொடுக்கவில்லை என்றால் கொடுக்கப்பட்டுள்ளது. நான் பில் நகலில் கையொப்பம் செய்ய அங்கீகரிக்கப்பட்ட நபர் என்பதற்கான ஆவணத்தை ஜிஎஸ்டியில் கொடுத்துள்ளேன் என்றால் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. தனிப்பட்ட நபருக்கு சொந்தமான நிறுவனத்தில் அங்கீகாரம் இல்லாமல் அங்கீகரிக்கப்பட்டவரின் கையொப்பம் என்ற இடத்தில் கையொப்பம் செய்ய முடியாது என்றால் பில்லில் கையொப்பம் செய்யலாம். எங்களுடைய நிறுவனம் தனிநபர் நிறுவனம் என்பதால் பிரிப்பரேட்டர் ஷிப் என்றுதான் பில் அடிக்க முடியுமே தவிர அங்கீகாரம் பெற்ற நபர் என்று பில் அடிக்க முடியாது என்றால் சரியல்ல.

3. RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் ஜிஎஸ்டி எண் வாங்கி தான் பில் போட்டுள்ளோம் என்றால் சரிதான். அவர்களின் GST எண் 33EDRPM9454C1Z7 என்றால் சரிதான். ஜிஎஸ்டி எண் யாருடைய பெயரில் இருக்கிறது என்பதை வலைதளத்தில் சரிபார்க்க முடியும் என்றால் சரிதான். RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் ஜிஎஸ்டி எண் யார் பெயரில் இருக்கிறது என்பதை சரி பார்த்து தான் பில் போட்டோம் என்றால் சரிதான். RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் உரிமையாளர் பெயர் முகமது ரிஃபாக் என்றால் சரிதான்.

4. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பில் அனைத்தும் RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் பெயரில் தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் பெயரில் நாங்கள் பில் வழங்கி உள்ளதால் அந்த

நிறுவனம்தான் எங்களுக்கு பணம் தர வேண்டும் என்றால் முதலில் இருந்து இந்த வழக்கு எதிரி அவர்தான் மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் என்றும், அவர்தான் முழுவதுமாக அந்த நிறுவனத்தை பார்த்து வருவதாகவும் கூறினார். இந்த விபரத்தை நான் அனுப்பிய அறிவிப்பு, தாக்கல் செய்துள்ள புகார் மற்றும் சாட்சிய வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கிற்காக எதிரி தான் RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் உரிமையாளர் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் எங்களுடைய நிறுவனத்திற்கும் எதிரிக்கும் இடையே எவ்விதமான வரவு செலவு கிடையாது என்றால் சரியல்ல.

5. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நாங்கள் அனுப்பிய அறிவிப்பில் என்னுடைய அம்மாவிற்கும் இந்த வழக்கு எதிரிக்கும் வியாபார தொடர்பு இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் எங்களுடைய புகாரிலும் அதைத்தான் கூறியுள்ளோம் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் பெயரில் வழங்கப்பட்ட பில்லில் என்னுடைய அம்மா கையெழுத்து இல்லை என்றால் சரிதான், நான் தான் கையொப்பம் செய்துள்ளேன். அவற்றில் RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் உரிமையாளர் பெயர் இந்த வழக்கு எதிரி தமீம் அன்சாரி என்று குறிப்பிடப்படவில்லை என்றால் பில்லில் உரிமையாளர் பெயர் வராது, நிறுவனத்தின் பெயர் மட்டும் தான் வரும்.

6. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.2 மற்றும் 3 வில்களில் கையொப்பம் செய்ய எனக்கு எந்த உரிமமும், உரிமையும் கிடையாது என்றாலும், அது என்னால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் ஜிஎஸ்டி பதிவு சான்று என்றாலும், அதில் உரிமையாளர் பெயர் முகமது ரிஃபாக் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். (**<u>அந்த பதிவு சான்று எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**)

7. எங்களுக்கும் RRR மார்க்கெட்டிங் நிறுவனத்திற்கும் எவ்வளவு நாட்களாக வியாபார தொடர்பு இருந்தது என்றால் 3 பில்கள் மூலமாக மட்டும் தான் சரக்கு கொடுத்துள்ளோம். நாங்கள் பொதுவாக கடனுக்காக சரக்கு கொடுக்கும்போது அந்த நிறுவனத்திடம் என்னென்ன ஆவணங்களை வாங்குவோம் என்றால் ஜிஎஸ்டி பில் மற்றும் சரக்கு வாகனத்தில் அனுப்புவதற்கான பில் ஆகியவற்றை மட்டும் தான் வாங்குவோம். RRR மார்க்கெட்டிங் நிறுவனம் எங்களுக்கு யார் மூலம் அறிமுகம் என்றால் இந்த வழக்கு எதிரி தான் எங்களுக்கு போன் செய்து பேசினார்.

8. RRR மார்க்கெட்டிங் நிறுவனத்திலிருந்து எங்களுக்கு மொத்தம் எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த பணம் வங்கி கணக்கு மூலமாக பரிமாற்றம் செய்யப்பட்டதா என்றால் ஆம். அதை எங்கள் நிறுவனத்தில் பராமரிக்கும் பேரேடு ரசீது எண் போட்டு எழுதி வைத்திருப்போம் என்றால் சரிதான். அந்தப் பேரேடு பக்கம் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போல் எவ்விதமான பரிவர்த்தனையும் நடக்கவில்லை என்பதால்தான் பேரேடு நகலை இந்த வழக்கில் நான் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை.

9. கூடல் நகர் காவல் நிலையத்தில் என் மீது எதிரி புகார் கொடுத்ததாக நான் ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த புகாருக்கு பிறகு தான் இந்த வழக்கு காசோலையை எதிரி வழங்கியதாக நான் வழக்கில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எங்களுக்கு வரவேண்டிய மொத்த தொகை ரூபாய் 4,02,167/- என்றால் சரிதான். ஆகையால் மேற்படி தொகைக்கு காசோலை வாங்காமல் 3,52,167/- ரூபாய்க்கு காசோலை வாங்கியதற்கு காரணம் எதுவும் உண்டா என்றால் ரூபாய் 2,67,000/-த்திற்கு தனியாக காசோலை இருக்கிறது, தனித்தனி பில் என்பதால் தனித்தனி காசோலை வாங்கியுள்ளோம்.

10. அந்த காசோலை தேதி என்னவென்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

என்னுடைய அறிவிப்பு, புகார் மற்றும் சாட்சிய வாக்குமூலத்தில் எதிரி ரூபாய் 3,52,167/– காசோலை வழங்கியதாகவும், மீதி தொகை ரூபாய் 50,000/–த்தை செப்டம்பர் மாதம் தந்து விடுவதாக RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் உரிமையாளர் கூறியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ரூபாய் 50,000 எங்களால் உற்பத்தி செய்யப்பட்ட சங்கதி என்றால் ரூபாய் 50,000/–த்தை கொடுத்துவிட்டு 2,67,000/–த்திற்கு இருக்கும் காசோலையை திரும்ப வாங்கிக் கொள்வதாக கூறினார். ரூபாய் 50,000/–த்தை கொடுத்துவிட்டு ரூபாய் 2,67,000/–த்திற்கான காசோலையை திரும்ப வாங்கி கொள்வதாக கூறியதாக என்னுடைய அறிவிப்பு, புகார் மற்றும் சாட்சிய வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான்.

11. என்னுடைய அறிவிப்பு மற்றும் புகாரின் படி RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் உரிமையாளர் எனக்கு ரூபாய் 4,02,167 தரவேண்டும் என்றால் சரிதான். ஆனால் நாங்கள் ரூபாய் 6,19,167/–க்கு இரண்டு காசோலைகளை வாங்கியதாக நான் கூறுகிறேன் என்றால் எங்களுக்கு காசோலையை கொடுத்த பிறகு ரூபாய் 1,67,000/– வங்கி கணக்கு மூலமாகவும், ரூபாய் 50,000/– பணமாகவும் ஆக மொத்தம் ரூபாய் 2,17,000/– கொடுத்துள்ளார்கள். இந்த விபரங்களை நான் அறிவிப்பு, புகார் மற்றும் சாட்சிய வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். மொத்தம் எத்தனை காசோலைகள் வாங்கினோம் என்றால் 3 காசோலைகள் வாங்கினோம். மீதம் இரண்டு காசோலை எங்களிடம் தான் இருக்கிறது என்றால் சரிதான். 3 காசோலைகளையும் எந்த தேதியில் வாங்கினோம் என்றால் 2 காசோலைகள் பில் போட்ட தேதியிலும், 3 வது காசோலை பணம் கேட்ட தேதியிலும் வாங்கினோம். தேதிகளை குறிப்பிட்டு கூற முடியுமா என்றால் ஞாபகம் இல்லை.

12. வழக்கு காசோலையில் RRR மார்க்கெட்டிங் முகமது ரிஃபாக் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எத்தனை ஆண்டுகளாக வங்கியில் பரிவர்த்தனை செய்து வருகிறேன் என்றால் நான்கு ஆண்டுகளாக செய்கிறேன். Brearer காசோலை என்பது என்னவென்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கு காசோலையில் யார் கையொப்பம் செய்துள்ளாரோ அவருடைய வங்கி கணக்கிலிருந்து பணத்தை எடுத்துக் கொள்ளும்படி தான் காசோலை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்களும் வழக்கு காசோலையில் கையொப்பம் செய்த நபரின் வங்கி கணக்கிலிருந்து பணத்தை வசூல் செய்ய தான் வசூலுக்காக காசோலையை தாக்கல் செய்தோம் என்றால் எங்களிடம் கொடுத்த காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்தோம். வழக்கு காசோலையில் RRR மார்க்கெட்டிங் புரோப்ரைட்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13. நாங்கள் RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் உரிமையாளர் முகமது ரிஃபாக் என்பவருக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் எதிரி எங்களிடம் அவர்தான் முகமது ரிஃபாக் என்று கூறி அறிமுகம் செய்து கொண்டார். எதிரி எங்களிடம் எவ்வாறு அறிமுகமாகினார் என்று எங்களுடைய அறிவிப்பு புகார் மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு எதிரியின் பெயர் என்னவென்றால் தமீம் அன்சாரி ஆகும். நான் தாக்கல் செய்துள்ள ஜிஎஸ்டி பில், வழக்கு காசோலை மற்றும் எந்த ஆவணத்திலும் எதிரி தமீம் அன்சாரி RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் உரிமையாளர் என்று காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் கொடுத்த புகாரிலும் அவருடைய பெயரை தமீம் அன்சாரி என்று தான் கூறினார் என்றால் சரிதான்.

14. RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் உரிமையாளர் தமீம் அன்சாரி என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நானும் என்னுடைய தாயாரும் தவறான நபர் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய தாயார் RRR மார்க்கெட்டிங் நிறுவனத்துடன் வியாபார தொடர்பு வைத்திருந்தார் என்றாலும், இந்த வழக்கு எதிரி மேற்படி நிறுவனத்தின் உரிமையாளரின்

மாமா என்பதால் அவர் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. என்னுடைய தாயாரை விசாரித்தால்தான் இந்த வழக்கின் உண்மை தெரியும் என்றால் சரியல்ல.

15. இந்த வழக்கு எதிரிக்கும் எங்களுக்கும் எவ்விதமான வியாபார தொடர்பு கிடையாது என்றாலும், வழக்கு காசோலையை அவர் எங்களுக்கு வழங்கவில்லை என்றாலும் சரியல்ல. RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் உரிமையாளர் பிணையமாக கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் தீப்பெட்டி தொழில் எதுவும் செய்யவில்லை என்றாலும், என்னுடைய தாயார் தான் செய்து வருகிறார் என்றாலும், RRR மார்க்கெட்டிங் நிறுவனத்துடன் உள்ள தொடர்பை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

16. இந்த வழக்கில் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு போதுமான முகவரி இல்லை என்ற காரணத்தை கூறி திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாற்றுமுறை ஆவண சட்டத்தின் படி முறையான அறிவிப்பு சார்பு செய்யப்படவில்லை என்பதால் எங்களுடைய வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் உரிமையாளர் தமீம் அன்சாரி இல்லை என்பதால் இந்த அறிவிப்பு திருப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு எதிரி தமீம் அன்சாரி எங்களுக்கு எந்த தொகையையும் கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றாலும், அவர் எங்களுக்கு காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி தமீம் அன்சாரிக்கும் எங்களுக்கும் எவ்விதமான வியாபார தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

17. நாங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆதாரங்களின்படி தமீம் அன்சாரியுடன் எங்களுக்கு வியாபார தொடர்பு இருந்தது என்பது தெரியவில்லை என்பதால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

16 Jun 2026 15:09

(Sd/-S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur.

// True Copy //P.P